ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2083/14 - 2018 අගෝස්තු මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.08.09
2083/14 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: வ/18/09/2013.
காணி அமைச்சின் கோவை இல.: 4-3/7/2014/D/249.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், வத்தளை பிரதேச செயலகப்பிரிவில், பள்ளியவத்த கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. கம். 4074 மற்றும் 2018.06.13 ஆம் திகதியிட்ட ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 01 என குறிப்பிடப்பட்ட முழு விஸ்தீரணத்தின் 0.0894 ஹெக்டயார் கொண்ட கீழ்க்காணும் விபரங்களையுடை காணித்துண்டு :

01. துண்டு இல. 1

காணியின் பெயர்: பள்ளியவத்த; காணியின் விபரம்: கட்டிடத்துடன் காணி; உரிமை கோருபவர்: இல. 204, பள்ளியவத்தையில் வசிக்கும் கே.பீ.எல்.ஏ. அல்விஸ் மற்றும் கே. பீ. ஜே. பி. ஜயவர்தன; ஆரம்ப உரிமை கோருபவர்:-; விஸ்தீரணம்: 0.0894 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018, ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக தோற்றுதல் வேண்டும். இன்னும் அக்காணியில் அவர்களுக்குள்ள உரிமைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈடுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பீ.டீ.ரீ.சீ. ராஜிகா,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை,
2018, ஒற்றோபர் 04.

8 – 801


*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DS/VS/LB/ACQ/J-198/01.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் கோவை
இல.: 4-3/4/2016/LO/374.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஆரம்ப வரைபட இல.: யா 2902; கிராமம்: சுன்னாகம்; கிராம அலுவலர் பிரிவு: J/198 சுன்னாகம் நகர் மத்தி; பிரதேச செயலாளர் பிரிவு: வலிகாமம் தெற்கு, உடுவில் ; மாவட்டம் : யாழ்ப்பானம் ; மாகாணம் : வடமாகாணம் ; நோக்கம்: சுன்னாகம் பொலிஸ் நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக.

**01. துண்டு இல. 1**

காணியின் பெயர்: உலகிதேராபடமும், ஆண்டிச்சிகுடியிருப்பும், ஆண்டியன் வளவும், ஆண்டிச்சிகுடியிருப்பும் கிணற்றடியும், பெரிய புலமும், மறுபிரிவுகளும்; உரிமை கோருபவர்: அப்பையர குணரட்ணம், மனைவி உதயகலா; காணியின் விபரம்: காணியினுள் ஒரு நிரந்தரக் கட்டடமும் ஒரு கழிப்பறையும், இரண்டு கழிப்பறைக் கிடங்குகளும் கிணறும் அமைந்துள்ளன; விஸ்தீரணம்: 0.3302 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு / ஆட்சி உரிமை எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலாமாக 2018, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி மு.ப.10.00 மணிக்கு வலிகாமாம் தெற்கு, உடுவில் பிரதேச செயலகத்தில் என் முன்பாக தோற்றும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையினையும் குறித்த காணியை/ ஆட்சி உரிமையை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளையும், நட்டஈட்டுத் தொகையையும், அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018, செத்தெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப் பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சிவராஜசிங்கம் ஜெயகாந்த்,
பிரதேச செயலாளர்,
உடுவில்.

பிரதேச செயலகம்,
உடுவில்,
2018, ஒற்றோபர் 06.

08-802